1989 நவம்பர் 2]

பிரதான கால்வாயிலே விடப்பட்டு, பிறகு அதன்மூலம் விருத்தாசலம் அணைக்கட்டு பாசன அமைப்பின் கீழ் 3,250 ஏக்கரும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனமாக 3,250 ஏக்கரும் இப்போது பாசனம் பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் மிகை நீரை நெய்வேலி நிலக்கரி நிறுவனம் விடுமானால், அவற்றைத் தாங்குவதற்கு, அந்தக் கொள்ளளவை ஏற்றுக்கொள்வதற்கு இந்திரா காந்தி கால்வாயால் முடியுமா என்று அரசு ஆய்ந்திருக்கிறது. இந்திரா காந்தி கால்வாயைப் பலப்படுத்துவதற்கு அரசு 45 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தீட்டி அது அரசினுடைய ஒப்புதலுக்காக வந்திருக்கிறது.

மதியுள்ளான் பாலத்தைத் திருப்பிக் கட்டுதல்.

*3480. **திரு. வி. தம்புசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கச்சனத்தில் இருந்து வலிவலம் கீவளூர் வழியாக நாகை செல்லும் மார்க்கத்தில் வலிவலம் அருகில் மதியுள்ளான் பாலம் இடிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை சீர்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீவளூர் கச்சனம் சாலையில் அமைந்துள்ள மதியுள்ளான் பாலம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலமாகும். 7—1—1981 அன்று ஓ.என்.ஜி.சி.-க்குச் சொந்தமான ஒரு கனரக வண்டி அந்தப் பாலத்தின் மீது செல்லும் போது பாலத்தின் வளைவுப் பகுதி பழுது அடைந்துவிட்டது. இதனால் அந்தச் சாலையில் போக்குவரத்து தடைப்பட்டது. சாலையில் போக்குவரத்து தடையின்றிச் செல்வதற்காக ஒரு வார காலத்திற்குள் தற்காலிகமாக ஆர்.சி.சி. குழாய் அமைத்து, மாற்றுப் பாதை அமைக்கப்பட்டு, மாற்றுப் பாதையில் போக்குவரத்துத் திருப்பி விடப்பட்டது. இவற்றைச் சீர் செய்ய வேண்டுமென்று ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அந்த மதிப்பீடு. எனவே, அந்தப் பணியைச் செய்வதற்காக 26—7—1989 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு 9.38 பர்சன்ட்டுக்கு மேல் வரப்பெற்றதால், மறு ஒப்பந்தப் புள்ளி 8—11—1989-க்குள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி இறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

10-10 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற பாலத்தைச் சீரமைக்கும் வேலை காலம் கடந்து வருவதால், அதன் மூலம் பாசனத்திற்சாகச் செல்கிற நீர் தடைப்படுகிறது. ஆற்றினுடைய பாலத்தின் அகலத்தைக் குறைத்து குறுகிய குழாய் போடப்பட்டிருப்பதால், அதன் மூலமாகச் செல்கிற நீர் தடைப்பட்டு அதன் காரணமாக சரியான

அளவுக்குத் தண்ணீர் செல்ல முடியாமல், விவசாயம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த வேலையை விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கருத்தில் கொள் ளும். அதே நேரத்தில் விரைந்து பணியாற்ற அரசு நடவடிக்கை யும் எடுக்கும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம்.

***974. திரு. ஏ. ஜி. சம்பத் :**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சி புரம் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு இலவச ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் ஆதிதிராவிடர் நலவிடுதி ஊராட்சி ஒன்றியத் திற்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கு கட்டிடம் கட்ட தேவையான இடவசதி உள்ளது. இருந்தபோதிலும் நிதிவசதிக்கேற்ப வரும் நிதியாண்டில் இவ் விடுதிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் நல ஆலோசணைக்குழு.

***1564. திரு. ஆர். அண்ணாநம்பி :**

திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.